இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 188 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 06 – ஞாயிற்றுக்கிழமை 18 பிப்ரவரி 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 188 : Thiruvalluvar Year - 2055 - Maasi 06 - Sunday 18 February 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00







# தமிழ்நாட்டு மக்களின் குறைகளைத் தீர்ப்பதே நோக்கம் !

## ‘மக்களுடன் முதல்வர்’ திட்டப் பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (16.2.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் முதல்வரின் முகவரி துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 1598 இளைஞர்களுக்கு அரசுப் பணிகளுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், ‘முதல்வரின் முகவரி’ துறை சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, பிப்.18 -**

**“தமிழ்நாட்டு மக்களின் குறைகளைத் தீர்ப்பதே கழக அரசின் நோக்கம்!” என்று, “மக்களுடன் முதல்வர்” திட்ட விழாவில் பயனாளிகளுக்கு நல உதவிகள் மற்றும் 1598 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (16.02.2024) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்டப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் 1598 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:–

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எத்தனையோ முத்திரை பதிக்கக்கூடிய திட்டங்களை நாங்கள் தீட்டியிருக்கிறோம். அதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில்,

- ❖ மகளிருக்கான விடியல் பயணம்
- ❖ புதுமைப் பெண் திட்டம்
- ❖ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்
- ❖ கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
- ❖ இல்லம் தேடிக் கல்வி
- ❖ மக்களைத் தேடி மருத்துவம்
- ❖ ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல்
- ❖ நான் முதல்வன்
- ❖ உங்கள் தொகுதியில் முதலமைச்சர்
- ❖ முதல்வரின் முகவரி
- ❖ கள ஆய்வில் முதலமைச்சர்

– இப்படி நான் சொல்லிக் கொண்டே போகமுடியும். இந்தத் திட்டங்கள் எல்லாம் கோடிக்கணக்கான மக்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கின்ற திட்டங்களாக அமைந்திருக்கின்றன. இந்த வரிசையில் இந்த திராவிட மாடல் அரசால் உருவாக்கப்பட்ட திட்டம்தான் ‘மக்களுடன் முதல்வர்’ என்கிற இந்த மகத்தான திட்டம்!

இந்தத் திட்டத்தின் பயனாளிகளுக்கு அரசு சேவைகளை வழங்குகிற இனிய நிகழ்ச்சியில் பங்கு பெறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

### அண்ணா – கலைஞர் காட்டிய பாதையை மறக்க மாட்டோம்!

“மக்களிடம் செல் – மக்களோடு வாழ் – மக்களுக்காக வாழ் என்பதுதான் எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவும் – தமிழினத் தலைவர் கலைஞரும் காட்டிய பாதை என்பதை நாங்கள் மறந்துவிட மாட்டோம்.

ஆட்சியில் இல்லாதபோது மக்களுக்காகப் போராடுவோம், வாதாடுவோம். ஆட்சியில் இருக்கின்ற நேரத்தில், மக்களுக்காக திட்டங்களைத் தீட்டுவோம், நன்மைகளை வழங்கிக் கொண்டே இருப்போம். அத்தகைய நன்மைகளை நேரடியாக ஒவ்வொரு மனிதருக்கும் வழங்குகிற மாபெரும் திட்டம்தான் ‘மக்களுடன் முதல்வர்’ என்கின்ற இந்தத் திட்டம்.

> **‘மக்கள் அளிக்கும் ஒவ்வொரு மனுவுக்கும் முடிவு காண்பதே முக்கியம்’ என்று நினைக்காமல், ‘விடிவு காண்பதே நோக்கம்’ என்று செயல்பட்டால்தான் அரசின் மேல் ஏழைகள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை வலுவடையும். அத்தகைய நம்பிக்கையை விதைக்கின்ற திட்டமாக ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம் அமைந்திருக்கிறது. இதற்குக் காரணமான அமைச்சர்களையும், அனைத்து அரசு அதிகாரிகளையும் நான் நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.**

அரசுத் திட்டங்களின் பயன்கள் கடைக்கோடி மனிதருக்கும் போய்ச் சேருகிறதா என்று ஆய்வு செய்கின்ற நேரத்தில், ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ திட்டத்தை தொடங்கி நான் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்றேன். நான் மட்டுமல்ல, பல அமைச்சர்களும் சென்றார்கள். அப்போது, அரசின் சேவைகளை விரைவாகப் பெறுவதில், சில மாவட்டங்களில் சுணக்கம் இருந்தது எங்களுக்குத் தெரிந்தது. மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளக் கூடிய நிலையில் இருந்தார்கள் என்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம். அதை முழுமையாகப் போக்க வேண்டும் என்பதற்காகத்தான், அவர்களுக்கு உதவக்கூடிய வகையில்தான் ஒரு புதிய திட்டமாக “மக்களுடன் முதல்வர்” என்கின்ற திட்டம் தீட்டப்பட்டது. 18.12.2023 அன்று கோவையில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன்.

### விண்ணப்பித்தால் போதும்! விரைவாகத் தீர்வு!

அரசு அலுவலகங்களுக்கு மக்கள் சென்று, சேவைகளைப் பெறும் அந்த நிலையை மாற்றி, அரசின் சேவைகளை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு போய்ச் சேர்க்க, எல்லா பொதுமக்களுக்கும் அதை எளிதில் கிடைக்கச் செய்வதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக அமைந்திருக்கிறது. சேவைகளைப் பெற அலையத் தேவையில்லை என்ற சூழ்நிலையை உருவாக்கினோம். விண்ணப்பித்தால் விரைவாகத் தீர்வு கிடைக்க ஏற்பாடுகளைச் செய்தோம்.

தேவையற்ற தாமதங்களைத் தவிர்த்தோம். அவசியமில்லாத கேள்விகளைக் குறைத்தோம். இதனால்தான், சேவைகளை விரைவாகவும், எளிதாகவும் பெற முடிகின்றது என்று இன்றைக்கு மக்கள் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, மாற்றுத்திறனாளிகள், முதியோர் போன்றோருக்கான சேவைகளை முதலிலேயே கண்டறிந்து, தீர்த்து வைப்பதில் இந்தத் திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. இந்தத் திட்டம் என்னுடைய நேரடிக் கண்காணிப்பில் இருக்கிறது.

முதற்கட்டமாக, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் 2 ஆயிரத்து 58 முகாம்கள் நடத்தப்பட்டன.

### முப்பதே நாட்களில் – 3 லட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுக்குத் தீர்வு!

இரண்டாம் கட்டமாக, எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற ஊரகப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


---

## காங்கிரஸ் வங்கிக் கணக்குகள் முடக்கம்:

# இந்திய ஜனநாயகத்தின் மீதான மிகப் பெரும் தாக்குதல் !

### அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கண்டனம் !

புதுடெல்லி, பிப். 18-

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் நிலையில், காங்கிரஸ் கட்சியின் வங்கிக்கணக்குகள் வருமான வரித் துறையால் திடீரென முடக்கப்பட்டன. இந்தியாவின் ஜனநாயகமே முடக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் வங்கி கணக்குகள் வருமான வரித்துறையால் முடக்கப்பட்டிருப்பதற்கு அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முன்னணி தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். மோடி அரசின் அதிகார போதை தலைவிரித்தாடுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள அறிக்கையில், அதிகார போதையில் இருக்கும் மோடி அரசு, நாட்டின் மிகப்பெரிய எதிர்க்கட்சியான காங்கிரசின் வங்கிக் கணக்குகளை முடக்கியிருப்பதாக குற்றம்சாட்டியுள்ளார்.



மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பது இந்திய ஜனநாயகம் மீதான மிகப்பெரிய தாக்குதல் என்று கூறியுள்ள கார்கே, சட்ட விரோதமாக வசூலிக்கப்பட்ட பணத்தை பா.ஜ.க. தேர்தல்களுக்கு பயன்படுத்துகிறது என்றும், ஆனால் பொதுமக்களிடம் இருந்து காங்கிரஸ் பெற்ற நிதி முடக்கப்பட்டுள்ளது என்றும் விமர்சித்துள்ளார். இதை மனதில் வைத்துதான், நாட்டில் எதிர்காலத்தில் தேர்தல்களே இருக்காது என்று தாம் தெரிவித்ததாகவும், எனவே, இந்த விவகாரத்தில் நீதித்துறை தலையிட்டு நாட்டின் பல கட்சி முறையையும், ஜனநாயகத்தையும் காக்க வேண்டுமென்று கார்கே வேண்டுகோள் விடுத்துள்ளார். மோடி அரசின் இந்த சர்வாதிகாரத்தை காங்கிரஸ் கடுமையாக எதிர்க்குமென்றும், வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தும் என்றும் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

### ராகுல் காந்தி

இதேபோல், காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில்,

தங்களை கண்டு பிரதமர் மோடி அச்சப்பட வேண்டாம் என்றும், காங்கிரஸ் கட்சியின் பலம் பணத்தில் இல்லை நாட்டு மக்களே காங்கிரஸ் கட்சியின் பலம் என்றும் தெரிவித்துள்ளார். சர்வாதிகாரத்தின் முன்பு காங்கிரஸ் கட்சி ஒருபோதும் மண்டியிடாது என்றும், காங்கிரஸ் தொண்டர்கள் ஒவ்வொருவரும் இந்திய ஜனநாயகத்தை காக்க போராடுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

### அஜய் மக்கான்

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் பொருளாளர் அஜய் மக்கான், காங்கிரஸ் கட்சியால் அளிக்கப்பட்ட காசோலைகளை வங்கிகள் பரிசீலிக்க மறுப்பதாக நேற்று முன்தினம் தகவல் வந்ததாகவும், இதுகுறித்து விசாரித்ததில், காங்கிரஸ் கட்சி மற்றும் இளைஞர் காங்கிரஸ் அமைப்பின் வங்கிக் கணக்குகள் வருமான வரித்துறையால் முடக்கப்பட்டிருப்பது தெரிய வந்ததாகவும் கூறினார்.

காங்கிரஸ் கட்சி மற்றும் இளைஞர் காங்கிரஸ் அமைப்பிடம் இருந்து 210 கோடி ரூபாய் வசூலிக்கும்படி வருமான வரித்துறை உத்தரவிட்டுள்ளது தெரிய வந்ததாக கூறிய அஜய் மக்கான், வங்கிக் கணக்குகளில் இருக்கும் நிதி அனைத்தும் நாட்டு மக்களிடம் இருந்து திரட்டப்பட்ட நிதி என்று கூறினார்.

தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாக இன்னும் 2 வாரங்கள் மட்டுமே இருக்கும் நிலையில், எதிர்க்கட்சிகளின் வங்கிக் கணக்குகளை முடக்குவது என்பது ஜனநாயகத்தை முடக்குவதற்கு சமம் என்று தெரிவித்தார்.

---

## தமிழ்நாடு

# அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்!

சென்னை, பிப்.18-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கு புதிதாக 5 உறுப்பினர்களை நியமித்து ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் ஐ.ஏ.எஸ் அதிகாரி சிவனருள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ.ஆர்.எஸ் அதிகாரி சரவணக்குமார், மருத்துவர் தவமணி ஆகியோரும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் உஷா சுகுமார், பிரேம்குமார் ஆகியோரும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

புதிய உறுப்பினர் 62 வயது வரை அல்லது 6 ஆண்டுகள் பொறுப்பில் இருப்பார்கள்.